


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.10.2025) முகாம் அலுவலகத்தில், ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த கபடி வீராங்கனை கார்த்திகா ரமேஷ்க்கு ஊக்கத்தொகையாக ரூபாய் 25 இலட்சத்திற்கான காசோலையை வழங்கி, வாழ்த்தினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் பயிற்சியாளர்கள் ம.ராஜேஷ், நாகராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.10.2025) முகாம் அலுவலகத்தில், ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த கபடி வீரர் அபினேஷ் மோகன்தாஸ்க்கு ஊக்கத்தொகையாக ரூபாய் 25 இலட்சத்திற்கான காசோலையை வழங்கி, வாழ்த்தினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, பயிற்சியாளர்கள் ம.ராஜேஷ், நாகராஜன், கபடி வீரர் அபினேஷ் மோகன்தாஸ் அவர்களின் பெற்றோர் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.10.2025) சென்னையில் நடைபெற்ற, ந.உ.சிவராமன், அ.கேத்தரின் சரண்யா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், முனைவர் டி.ஆர்.பி.ராஜா, சாந்தோம் பேராலய அதிபர் வின்சென்ட் சின்னதுரை மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 25.10.2025 அன்று திரைக்கலைஞர் மு.சு.மாறன் அவர்களின் சகோதரர் மறைந்த மு.சு.சீனிவாசன் அவர்களின் மகன் விஸ்வா சீனிவாசன் – மாளவிகா இணையரின் திருமண வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி, எழுத்தாளர் வே.மதிமாறன் உள்பட மாமன்ற உறுப்பினர்கள், மணமக்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

## வடசென்னையில் தூர்வாரும் பணிகள்!


# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!











துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.10.2025) பெருநகர சென்னை மாநகராட்சி தண்டையார்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட கேப்டன் காட்டன் கால்வாயில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளை டான்பாஸ்கோ பள்ளி அருகில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது அமைச்சர் கே.என்.நேரு, மேயர் திருமதி. ஆர்.பிரியா, மரு.கலாநிதி வீராசாமி எம்.பி., ஆர்.டி.சேகர், ஆர்.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், மாநகராட்சி ஆணையர்ஜெ.குமரகுருபரன், துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டலக் குழுத்தலைவர் நேதாஜி யு.கணேசன், நிலைக்குழுத் தலைவர் (வரிவிதிப்பு மற்றும் நிதி) திருமதி சர்பஜெயாதாஸ் நரேந்திரன், துணை ஆணையர்கள்சிவ.கிருஷ்ணமூர்த்தி,(பணிகள்),கட்டா ரவி தேஜா,(வடக்கு வட்டாரம்), மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.